பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 01 வெள்ளிக்கிழமை 17.09.2021 கதிர் 180

## மேலும் 816 பேர் நேற்று சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 816 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆயிரத்து ☞2

# ஒக்டோபர் 1 வரை ஊரடங்கு நீடிப்பு

## ஜனாதிபதி கோட்டா அதிரடி அறிவிப்பு

*** 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்கும் பைஸர் தடுப்பூசியை மாத்திரம் ஏற்றுமாறு ஆலோசனை**

*** அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துமாறு நிறுவனத் தலைவர்களிடம் வேண்டுகோள்**

*** சட்டத்தை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை**



**நாடு முழுவதும் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.** ☞2

## ‘சினோவெக்’ தடுப்பூசி சீனாவால் நன்கொடை

### வருகின்றது 10 இலட்சம் டோஸ்



இலங்கைக்கு ஒருதொகை ‘சினோவெக்’ கொரோனாத் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்குவதற்குச் சீன அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி 10 லட்சம் டோஸ் சினோவெக் தடுப்பூசிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று ☞2

## 21, 22 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூடும்

கொழும்பு, செப். 17

நாட்டில் தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு அடுத்த வாரம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மாத்திரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மது நிலையங்களை திறப்பதற்கு அனுமதி

நாட்டில் இன்று முதல் வைன் ஸ்டோர்ஸ், பியர் ஷேன்கள் மற்றும் போத்தல் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கலால் வரி திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

## அச்சுறுத்தல்கள் தொடர்பில் முறையிடுமாறு ஆசிரியர்களுக்குப் பொலிஸார் அறிவித்தல்

மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை நிறுத்துமாறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுமாக இருந்தால் அது தொடர்பில் அறிவிக்குமாறு ஆசிரியர்களைப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆசிரியர் சங்கங்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், மாணவர்களுக்கு இணையம் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், அவ்வாறாக எவரேனும் அச்சுறுத்தல் விடுப்பார்களாக இருந்தால் 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ முறையிட முடியும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விரைந்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உத்தரவிட்டுள்ளார்.

அரச ஊழியர்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கின்றமை மற்றும் அச்சுறுத்தல் விடுக்கின்றமை குற்றமாகும் என்பதால், அவ்வாறான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ☞2

## காற்றில் பறந்தது சமூக இடைவெளி மது நிலையங்களில் குவிந்த மக்கள்




கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மதுபானசாலைகள் அனைத்தும் ஊரடங்கு காலங்களில் மூடப்பட்டுள்ள நிலையில் இன்று முதல் மீளத் திறக்க அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ☞2

## ரிஷாத் எம்.பிக்கு மறியல் நீடிப்பு; மனைவி, மாமனாருக்குப் பிணை



சிறுமி ஹிஷாலினி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் மனைவி மற்றும் மாமனார் ஆகியோருக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. ☞2

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட தகவல் தொழில்நுட்ப கூடம் திறப்பு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐக்கிய அமெரிக்க பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குக் கையளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப கூடத்தின் திறப்பு விழா இன்று காலை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தகவல் தொழில்நுட்ப கூடத்தைத் திறந்து வைத்தார். ☞2

## ஒக்டோபர் 1 வரை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தலைமையில், இன்று முற்பகல் வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணியின் வாராந்தக் கூட்டத்தின் போதே ஊரடங்கு நீடிப்புத் தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதியன்று நீக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என இந்தக் கூட்டத்தின்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்போது, சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியால் கேள்வி எழுப்பியபோது பதிலளித்து உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன, நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள 12 முதல் 19 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுமாறு, விசேட சுகாதார நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது என்றார்.

அத்துடன், சிகிச்சையக (கிளினிக்) விசேட வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ், பெற்றோர்களின் அனுமதியுடன், அந்தச் சிகிச்சையகங்களுக்குள் வைத்து மாத்திரம் மேற்படி சிறுவர்களுக்கான தடுப்பூசியை ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

12 -15 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்குரிய தடுப்பூசி ஏற்றல் தொடர்பிலும், விசேட வைத்திய குழுவினிடம், ஜனாதிபதியால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அந்தக் குழு, உலகின் ஏனைய நாடுகளில்கூட, அதற்கான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும், இருப்பினும், 15 - 19 வயதுக்கிடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலுக்குரிய பரிந்துரை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டது.

இதன்படி, நாட்டிலுள்ள 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி முடிக்குமாறும், வைத்தியசாலைகளுக்குள் வைத்து மாத்திரம் அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அத்துடன், அது தொடர்பில் அச்சிறுவர்களின் பெற்றோருக்குத் தெளிவுபடுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

விசேட வைத்திய குழுவின் பரிந்துரைக்கமைய 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்கும் பைசர் தடுப்பூசியை மாத்திரம் ஏற்றுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தெரிவு செய்யப்பட்ட தடுப்பூசிகளை மாத்திரமே இளைஞர் - யுவதிகள் எதிர்பார்க்கும் நிலைமை தோன்றியுள்ளது என்றும், அவர்களுக்கென விசேட தடுப்பூசி அறிமுகப்படுத்தவில்லை என்றும், நாட்டு மக்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் தரம் வாய்ந்தவை என்றும் எடுத்துரைத்த விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் நீலிகா மலவிகே ஆகியோர், அதனால், விசேட தடுப்பூசி கிடைக்கும் வரை காத்திருக்காது, அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சிக்கல் நிலையுடன்கூடிய கொரோனா நோயாளிகளுக்கு ஆயுர்வேத சிகிச்சையளிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காக, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகளில், கொரோனா சிகிச்சை நிலையங்களை உருவாக்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், காணிப் பதிவு அலுவலகம் போன்ற அத்தியாவசியச் சேவைகளைப் பொது மக்களுக்கு வழங்கும் நிறுவனங்களின் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்த ஜனாதிபதி, இது தொடர்பில் அந்நிறுவனங்களின் தலைவர்கள், உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நிலவும் சவால்மிக்க நிலைமைக்கு மத்தியிலும், ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை உயர்ந்த பட்சத்தில் பேண முடிந்துள்ளது எனக் கூறிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் துறையினருக்கும் நன்றி தெரிவித்தார்.

மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதார வழிகள் என்பன எக்காரணம் கொண்டும் பாதிக்காத வகையில், அத்தியாவசியச் சேவைகளை முன்னர் போன்று தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

200 இற்கும் குறைவான மாணவர் கொள்ளளவைக் கொண்டுள்ள கிராமிய பாடசாலைகளைத் திறப்பது தொடர்பிலும் இன்றைய கூட்டத்தின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இந்த விடயத்தில், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் அனைவரும், கல்வி அமைச்சுடன் இணைந்துப் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டும் என்றும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளல் தொடர்பில் பொதுமக்களை ஊக்குவிக்கும் முழுப் பொறுப்பும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹணவிடம் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் ஈடுபடுவோர், சுயதொழில்களை மேற்கொள்வோர், எவ்விதத் தடையுமின்றி தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாது, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல, பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, ரமேஷ் பதிரண, நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சிசிர ஜயகொடி, சன்ன ஜயசுமன, நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன, பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, விமானப்படைத் தளபதி எயார்மார்ஷல் சுதர்ஷன பதிரண, பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரமரத்ன ஆகியோரும், கொரோனா ஒழிப்புக்கான விசேட செயலணியின் உறுப்பினர்களும், மாகாண மற்றும் பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்களும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலைக்கழக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் எஸ். ரவிராஜ், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், முன்னாள் மாணவர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாட்டின் தற்போதைய கொரோனா சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த நிகழ்வு மிகவும் குறைந்தளவானவர்களுடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

## ரிஷாத் எம்.பிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய போது தீக் காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்திருந்த சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சிறுமி ஹிஷாலினி, தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது ஜூலை 15ஆம் திகதி உயிரிழந்தார்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி, மாமனார், மைத்துனர் மற்றும் சிறுமியை வீட்டுப் பணிக்கு அமர்த்திய தரகர் ஆகியோர் ஜூலை 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, சிறுமியின் மரண விடயம் தொடர்பான வழக்கில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான வழக்கில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ரிஷாத் பதியுதீனும் சந்தேகநபராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிறுமியை வீட்டுப் பணிக்கு அமர்த்திய தரகரும், ரிஷாத் பதியுதீனின் மைத்துனரும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இதைத் தொடர்ந்து இன்று ரிஷாத்தின் மனைவிக்கும் மாமனாருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

## 'சினோவெக்' தடுப்பூசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. 'சினோவெக்' உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் தடுப்பூசி வகைகளில் ஒன்றாகும்.

இதற்கமைய கடந்த ஓகஸ்ட் இறுதி வரையில் சுமார் 50 நாடுகளால் 180 கோடி டோஸ் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனவும், இதில் 140 கோடி டோஸ் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன எனவும் சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தனது தடுப்பூசி வேலைத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக இந்தத் தடுப்பூசிகள் வழங்கி வைக்கப்படவுள்ளன என்று சீனத் தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

## காற்றில் பறந்தது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டம் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் மதுபானசாலைகளின் முன்னால் நீண்ட வரிசையில் மதுப்பிரியர்கள் காத்திருந்தை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அத்தோடு, மதுபானசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதோடு, சமூக இடைவெளியைப் பேணாமல் மதுப்பிரியர்கள் குவிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலும் 816 பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

894ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் உள்நுழையும் 13 இடங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி நேற்று 263 வாகனங்களில் பயணித்த 142 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் மேல் மாகாணத்தில் நேற்று காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை 285 பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது அனுமதிப்பத்திரமின்றி 865 வாகனங்களில் பயணித்த 1,438 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## அச்சுறுத்தல்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கேலிக்குள்ளாகும் விசாரணை

சிறைத்துறை அமைச்சராக இருந்துகொண்டு வேளை கெட்ட வேளையில், மதுபோதையில், பிஸ்டலுடன் சிறைகளுக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணிய லொஹான் ரத்வத்தை தொடர்பில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ள எதிர்ப்பலைகளை அடுத்து அவருக்கு எதிராக மூன்று மட்டங்களில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்பது போன்ற தோற்றத்தை – கதையை – அவிழ்த்து விடுகின்றது கோட்டாபய ராஜபக்ஷ அரசு.

ஆனால் அவரைப் பிறிதொரு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக தொடர்ந்தும் ஜனாதிபதி கோட்டாபய வைத்திருக்கும் வரையில் அவர் தொடர்பில் இவ்விடயங்களில் நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறும், உண்மை வெளிப்படும் என்று நம்புவதற்கு இடமில்லை. வழமை போல பொறுப்புக்கூறல் விடயத்தில் ராஜபக்ஷக்கள் அரசு பொறுப்பின்றி நடந்து, தன் திமிர்த்தனத்தையே காட்டும் என்று நம்ப வேண்டி உள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக அதன் தலைவர் கலாநிதி நிமால் கருணாசிறி தெரிவித்திருக்கின்றார். சம்பந்தப்பட்ட கைதிகள், சிறை அதிகாரிகள், லொஹான் ரத்வத்தை மற்றும் இவ்விடயத்தில் தொடர்புபட்டுள்ள ஏனைய தரப்பினரிடம் எல்லாம் ஆணைக்குழு வாக்குமூலங்களைப் பதிவு செய்யும், அதன் அடிப்படையில் ஆணைக்குழு விரைவில் தனது அறிக்கையை முன்வைக்கும், அதையொட்டி அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் தங்களது தொடர் நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருக்கும் என ஆணைக்குழுவின் தலைவர் கூறுகின்றார்.

நல்லது. சரிதான். உண்மைதான். மனித உரிமைகள் ஆணைக்குழு ஓரளவு நியாயமாக நடக்கக்கூடும் என நம்பினாலும் கூட, அதன் அறிக்கை வெறும் பரிந்துரை மட்டுமே. அரசையோ, அதிகாரிகளையோ, ஆட்சியாளர்களையோ அது கட்டுப்படுத்தும் பரிந்துரை அல்ல என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவிடயத்தில் நீதியாக நடந்தாலும் கூட அதன் மூலம் நீதி, நியாயம் நிலைநாட்டப்படும் என்று நம்புவதற்கு வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

சிறைத்துறை நிர்வாகமும் தனியான ஒரு விசாரணையை ஆரம்பித்திருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான சந்திர ஏக்கநாயக்க தெரிவித்திருக்கின்றார். மற்றொரு சிறைச்சாலை ஆணையாளரான எஸ்.கொடித்துவக்கு என்பவர் துறை சார்ந்த விசாரணையை மேற்கொள்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறையில் நடந்த இந்த அத்துமீறல் குறித்து ஊடகங்களில் செய்தி வெளியாகி, பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சமயத்தில், இது குறித்து துறையின் பேச்சாளர் சந்திர ஏக்கநாயக்கவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமக்கு எதுவும் தெரியாது அப்படி ஒரு சம்பவம் குறித்து கேள்விப்படவில்லை என்று முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல நடந்து, தமது அமைச்சரின் திருகுதாளத்தை மூடி மறைக்கவே அவர் முயன்றார் என்பது மறுக்கக் கூடியதல்ல. சிறைத்துறை ஆணையாளர் நாயகம் கூட பதில் கூறுவதற்கு தொடர்புக்கு வராமல் ஒளித்துப் பிடித்து விளையாடினார். அத்தகைய சிறைத்துறை விசாரணை மூலம் உண்மை அம்பலமாகும் என்று நம்புவதற்கு இடமில்லை.

லொஹான் ரத்வத்தையின் அத்துமீறலுக்கு இடமளித்து பார்த்திருந்த சிறை அதிகாரிகளும் விடயத்தை மூடி மறைப்பதற்கே முன்னின்று ஒத்துழைப்பர் என்றே கருத முடியும். ஏற்கனவே சி.சி.ரி.வி. காணொலிகளின் பதிவுகளை அவர்கள் முடக்கி விட்டார்கள் என்ற தகவல் உண்டு. இந்தப் பின்புலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் கீழ் இயங்கும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் அதன் நடுநிலையான – நீதி, நியாயமான – விசாரணை முறைகள் குறித்து மக்களுக்கு ஏற்கனவே நன்கு தெரியும்.

அதனால் மும்முனை விசாரணைகளும் மலையைக் கெல்லி எலியைத்தான் பிடிக்கும் என்பதை இப்போதே கண்மூடிக் கொண்டு கூறிவிட முடியும். இலங்கையின் புலனாய்வு விசாரணை பொறிமுறை அத்தகையதுதான்!



## வெடுக்குநாறி மலைப்பகுதியில் அதிகளவான இராணுவ பிரசன்னம்

### ஆதி லிங்கேஸ்வரரை அழிக்க திட்டம் என மக்கள் தெரிவிப்பு

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயப்பகுதியில் அதிகளவான இராணுவ பிரசன்னம் காணப்படுவதாகத் தெரிவித்த பிரதேச மக்கள் அங்குள்ள சில விக்கிரகங்களும் அண்மையில் சேதப்படுத்தப்பட்டிருந்தன எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில் –

ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்குள் அப்பகுதி மக்கள் செல்ல முடியாது என தொல்பொருள் திணைக்களம் தடை விதித்து வரும் நிலையில் வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் ஊர் மக்கள் ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லாத நிலையில் தொல்லியல் திணைக்களம் அங்குள்ள பல விக்கிரகங்களை அழித்துள்ளதாக நாம் சந்தேகிக்கின்றோம். அத்துடன் பல விக்கிரகங்களும் சூலங்களும் காணாமல் போயுள்ளன.

இந்தச் சூழலில் தற்போது ஆலயத்தை நோக்கி டிராக்டரில் பௌத்த தேரர்கள் அமரும் கதிரை உட்பட பொருள்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்படுகின்றன. எமது ஆலயத்தை பௌத்தமயமாக்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நாம் எண்ணுகின்றோம். இது தொடர்பில் அரசியல் தலைவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மின்சார சபை!

இலங்கை மின்சார சபை இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

மின்சார நுகர்வோர் தொடர்ந்து மின் கட்டணத்தை செலுத்தாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், நுகர்வோர் தங்கள் மின்சார கட்டணங்களை செலுத்துவதை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார். ‘நாங்கள் இன்னும் ஒரு மாதம் அவகாசம் கொடுத்தால் பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும்.

தற்போது செலுத்த வேண்டிய மின் கட்டணம் மட்டும் சுமார் 4,400 கோடி ரூபாவாகும். இதில் நாங்கள் வட்டியை சேர்க்கவில்லை. கட்டணத்தை மட்டுமே செலுத்துமாறு கோருகின்றோம்.

கட்டணத்தை செலுத்தக்கூடியவர்களும் இந்த காலப்பகுதியில் அதனை செலுத்தத் தவறியுள்ளனர். இதனால் நாங்கள் பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல் நடத்திய தேரர் பிரதமரின் ஆலோசகராக பதவி வகிக்கவில்லை



கெக்கிராவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதாரப் பிசோதகர் மீது தாக்குதல் நடத்தினார் எனக் கூறப்படும் பல்லபெத்தே நந்தரதன தேரர், பிரதமரின் ஆலோசகராக பதவி வகிக்கிறார் என வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஊடகப்பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நந்தரதன தேரர் தற்போது பிரதமரின் ஆலோசகராகவோ அல்லது வேறு எந்தவொரு பதவியும் வகிக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## லொஹான் ரத்வத்தைக்கு எதிரான முறைப்பாடு உடன் விசாரணைக்கு உத்தரவிட்டார் அமைச்சர்

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தைவிற்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை உடனடியாக விசாரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸ்மாஅதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் கைதிகளை அச்சுறுத்தினார் எனக் கூறப்படும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை உடனடியாகக் கைது செய்ய வலியுறுத்தி, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு குற்றப் புலனாய்வுத் துறையில் முறைப்பாட்டை செய்திருந்தது.

இது தொடர்பிலேயே அமைச்சர் வீரசேகரவின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# 20 கோடி தடுப்பூசிகள் ஆபிரிக்காவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தது



உலகளாவிய அளவில் கொவிட்-19 தொற்றுநோயைக்கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம், 20 கோடி கொரோனா வைரஸ் தடுப்பூசி மருந்துகளை ஆபிரிக்காவுக்கு வழங்கவுள்ளது.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தனது ஐரோப்பிய நாடாளுமன்ற உரையில்,

‘அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் முழுமையாக வழங்கப்பட வேண்டிய புதிய நன்கொடை ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட 25 கோடிக்கும் மேல் வந்துள்ளது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எதிர்கொள்ளும் சவாலை அதிகரிக்க ஐரோப்பிய ஒன்றிய தீர்மானத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இது ஒற்றுமைக்கான முதலீடு. உலக சுகாதாரத்துக்கான முதலீடு. 70 கோடி டோஸ்களை ஐரோப்பியர்களுக்கு வழங்கியதற்கு மேல், 27 நாடுகளின் கூட்டமைப்பு 130 நாடுகளுக்கு தடுப்பூசிகளை அனுப்பியுள்ளது.

இதை அடைவதற்கு உலகின் ஒரே பிராந்தியம் நாங்கள் மட்டுமே. உலகளாவிய தடுப்பூசியை விரைவுபடுத்துவதே எங்கள் முதல் மற்றும் மிக முக்கியமான முன்னுரிமை. உலகளவில் செலுத்தப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசிகளில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே ஏழை நாடுகளில் செலுத்தப்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டைக் களையும் வகையில் உலகளாவிய தடுப்பூசி திட்டத்துக்கு முன்னுரிமை அளிப்போம். இது தடுப்பூசி போடாதவர்களின் தொற்றுநோயாக மாறாமல் இருக்க முடிந்த அனைத்தையும் செய்வோம்.

ஆபிரிக்காவில் தடுப்பூசி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இந்த கூட்டமைப்பு 100 கோடி யூரோக்களை (120 கோடி டொலர்கள்) முதலீடு செய்கின்றோம்’ என கூறினார்.

ஆபிரிக்க சுகாதார அதிகாரிகள் கண்டத்தின் மக்கள்தொகையில் 60 சதவீதம் தடுப்பூசி போட 80 கோடிக்கும் குறைவான டோஸ் தேவை என்கிறார்கள். கடந்த வாரம் நிலைவரப்படி, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான ஆப்பிரிக்கா மையங்களின்படி, 14.5 கோடி டோஸ் வாங்கப்பட்டுள்ளது.

130 கோடி மக்கள் கொண்ட கண்டத்தில் வெறும் 3.5 சதவீத மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது

# பிரித்தானியாவில் கொவிட் தீவிரம் 73 லட்சத்தைக் கடந்தது பாதிப்பு

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் 26ஆயிரத்து 911பேர் பாதிக்கப்பட்டதோடு 158பேர் உயிரிழந்துள்ளனர். உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட நான்காவது நாடாக விளங்கும் பிரித்தானியாவில், இதுவரை மொத்தமாக 73 லட்சத்து 39 ஆயிரத்து 9பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒரு லட்சத்து 34ஆயிரத்து 805பேர் உயிரிழந்துள்ளனர்.தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 12லட்சத்து 97ஆயிரத்து 175பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஆயிரத்து 81பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக, 59லட்சத்து ஏழாயிரத்து 029பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தலிபான் தலைவர்களுக்கிடையே ஆப்கானிஸ்தானில் மோதல்



ஆப்கானிஸ்தானில் புதிய அரசை கட்டியெழுப்புவது தொடர்பாக தலிபான் தலைவர்களுக்கு இடையே பெரிய அளவிலான மோதல் வெடித்திருப்பதாக மூத்த தலிபான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலிபான் இயக்கத்தின் இணை நிறுவனரும் மூத்த தலைவருமான முல்லா அப்துல் கனீ பராதருக்கும் தலிபான் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் ஒருவருக்கும் இடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

அப்துல் கனீ பராதர் கடந்த சில நாள்களாக பொதுவெளிக்கு வராத நிலையில், தலிபான் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன என உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் தலிபான்கள் இதை அதிகாரப்பூர்வமாக மறுத்துள்ளனர்

# பாகிஸ்தானில் தஞ்சம் அடைந்தனர் ஆப்கான் கால்பந்து வீராங்கனைகள்

ஆப்கானிஸ்தானின் ஜூனியர் கால்பந்து வீராங்கனைகள் பாகிஸ்தானில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த வீராங்கனைகள் கடந்த மாதம் தாலிபன்களுக்கு பயந்து மறைந்து வாழ்ந்தனர்.

ஆப்கான் பெண்கள் கால்பந்து அணி காபூலைவிட்டு வெளியேறிவிட்டனர் ஆனால் ஜூனியர் அணியில் பாஸ்போர்ட் மற்றும் போதுமான ஆவணங்கள் இல்லாத காரணங்களால் அவர்களால் நாட்டைவிட்டு தப்பிச் செல்ல முடியவில்லை.

புட்பால் பார் பீஸ் என்ற அமைப்பின் முயற்சியால் 32 வீராங்கனைகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்போது விசா கிடைத்துள்ளது. எனவே மொத்தம் 115 பேர் லாகூரில் உள்ள பாகிஸ்தான் கால்பந்து கூட்டமைப்பின் தலைமையகத்தில் தங்க வைக்கப்படுவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தவீராங்கனைகள்பாகிஸ்தானுக்குள் அவசரமாக நுழைவதற்கு பிரதமர் இம்ரான்கானிடம் அனுமதி கோரினர் என தி இண்டிபெண்டெண்ட் ஊடக செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



# விண்வெளிக்கு நான்கு அமெரிக்கர்கள் பயணம்

## சுற்றுலா அனுப்பியது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்

விண்வெளி சுற்றுலா வணிகத்தில் ஒரு புதிய சகாப்தத்தை குறிக்கும் வகையில், ஸ்பேஸ்எக்ஸ்நிறுவனம், 4 அமெரிக்கர்களை முதல்முறையாக விண்வெளிக்கு சுற்றுலாவுக்கு அனுப்பியுள்ளது.

கோடீஸ்வரர் இ-காமர்ஸ் நிர்வாகி ஜாரெட் ஐசக்மேன் மற்றும் மூன்று பணக்கார தனியார் குடிமக்களை ஏற்றிச் சென்ற விண்கலம், கேப் கனாவெரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து புதன் கிழமை இரவு புறப்பட்டது.

புளோரிடாவில் உள்ள கேப் கெனவெரல் விண்வெளித் தளத்திலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் என்.9 என்ற ரொக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்தது. இன்ஸ்பிரேன்-4 என்று விண்கலத்துக்கு பெயரிடப்பட்டுள்ளது.

ரொக்கெட் விண்ணில் பாய்ந்த 12 நிமிடங்களில் அதன் இரண்டாவது அடுக்கு தனியாகப் பிரிந்து, வெற்றிகரமாக புவியின் நீள்வட்டப் பாதைக்குள் விண்கலம் நுழைந்தது.

பூமியிலிருந்து 575கி.மீ. உயரத்தில் இந்த விண்கலம் அடுத்த 3 நாள்களுக்குச் சுற்றி வரும். மணிக்கு 27,300 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிப்பாயும் இந்த விண்கலம், 90 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை முழுவதுமாக சுற்றிவரும்

3 நாள்கள் விண்வெளி பயணத்திற்கு பிறகு அட்லாண்டிக் கடலில் பால்கான் ரொக்கெட் வெற்றிகரமாகத் தரையிறங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரசாங்கத்தின் மூலம் பயிற்சிபெற்று அதிகாரபூர்வ பயணத்தை மட்டுமே விண்வெளி வீரர்கள் மேற்கொண்டு வந்தனர். முதல் முறையாக, இந்த 4 பேரும் விண்வெளிக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட முதல் பொதுமக்கள் என்ற சிறப்பை பெறுகிறார்கள்.

இந்த விண்வெளிச் சுற்றுலாவில் ஷிப்ட்4 பேமெண்ட் நிறுவனத்தின் நிறுவனர் கோடீஸ்வரர் ஜார்ட் ஐசக்மேன், செயின்ட் ஜூட் மருத்துமனையின் 29 வயதான மருத்துவர் ஹேலே ஆர்சனாக்ஸ். எலும்பு புற்றுநோயால் அவதிப்பட்டு இடது செயற்கைக்கால் ஆர்சனாக்ஸுக்கு பொருத்தப்பட்டுள்ளது. செயற்கைக் காலுடன் விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்ணும் ஆர்சனாக்ஸ் தான்.

இந்தப் பயணத்துக்காக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள் கிறிஸ் செம்ப்ரோஸ்கி, சியான் ப்ராக்டர் ஆகியோர் சென்றுள்ளனர். இதில் கிறிஸ் செம்ப்ரோஸ்கி அமெரிக்க விமானப்படைமுன்னாள் வீரர்தற்போது டேட்டாபொறியாளராக பணியாற்றி வருகிறார். 51 வயதான சியான் பிராக்டர் ஒரு புவிஅறிவியல் வல்லுநர், கடந்த 2009ஆம் ஆண்டே நாசாவுக்கு பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர் தற்போது கல்லூரி பேராசிரியராக உள்ளார்.

இந்த விண்வெளிச் சுற்றுலாவுக்காக இவர்கள் 4 பேரும் 9 மாதங்கள் ஸ்பேக்ஸ் எக்ஸ் நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். புவிஈர்ப்பு சக்தியில்லாத இடத்தில் எவ்வாறு நடந்து கொள்வது, எவ்வாறு பய



ணிப்பது உள்ளிட்ட பயிற்சிகள் இவர்கள் 4 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ரொக்கெட் முழுவதும் தானியங்கி என்பதால், இந்த 4 பேரைத் தவிர விண்கலத்தில் எந்த விண்வெளி வீரர்களும் உடன் செல்லவில்லை.

இந்த விண்வெளிச்சுற்றுலா மூலம் திரட்டப்படும் பணம் குழந்தைகளுக்கான புற்றுநோய் தடுப்பு ஆராய்ச்சிக்கு வழங்கப்படவுள்ளது. இந்த பயணத்துக்கு தலைமை ஏற்றுள்ள கோடீஸ்வரர் ஐசக்மேன் தனியாக டென்னஸி நகரில் உள்ள செயின்ட் ஜூட் குழந்தைகள் புற்றுநோய் மருத்துவமனைக்கு நன்கொடை வழங்குவேன் என உறுதியளித்துள்ளார். விண்வெளி சுற்றுலா சந்தையில் இது மற்றொரு மைல்கல் ஆகும், இது ஒரு தசாப்த கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் எழுச்சி பெற்று வருகிறது.

இந்த கோடையின் தொடக்கத்தில், கோடீஸ்வரர் தொழிலதிபர்கள் சர் ரிச்சர்ட் பிரான்சன் மற்றும் ஜெஃப் பெசோஸ் ஆகியோர் தங்கள் சொந்த விண்வெளி வாகனங்களில் பூமியின் வளிமண்டலத்திற்கு மேலே சென்றிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒக்டோபரில் கொரோனா அதிகரிக்கும் வல்லுநர்கள் கணிப்பு என எச்சரிக்கை



தமிழ்நாட்டில் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதால் மக்கள் கொரோனா தொடர்பான விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று தமிழக மருத்துவத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார்.

கடந்த சில மாதங்களாகவே தமிழ்நாட்டில் கொரோனா பாதிப்பு 1,500 -1,600 இற்குள் பதிவாகி வரும் நிலையில், அடுத்த மாதம் இந்த நிலை மாறக்கூடும் எனத் தெரிகிறது. இது தொடர்பாக மருத்துவத்துறை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். ஆகவே, மக்கள் கொரோனாத் தடுப்பு வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கைக்கொள்வதன் மூலம், கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற இழப்புகளைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# மக்களின் வாழ்வியலைப் படைப்புகளாக்கிய எழுத்தாளர் பிரான்சிஸ் கிருபா காலமானார்



இலகு தமிழில் மக்களின் வாழ்வியலைப் பதிவுசெய்து உலகத் தமிழர்கள் மத்தியில் பிரபலமான தமிழக எழுத்தாளர் பிரான்சிஸ் கிருபா உடல்நலக் குறைவால் காலமானார்.

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர் பிரான்சிஸ் கிருபா, இலகு தமிழில் தமிழ்ச்சமுதாயத்தின் எளிய மனிதர்களின் எளிமையான வாழ்வியலைப் பதிவு செய்துவந்தவர். நவீன இலக்கிய வடிவில் தனது எழுத்துக்களுக்கெனத் தனியான மரியாதையைப் பெற்றஇவர், இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் மத்தியிலும் நன்கு அறிமுகமான ஒருவர். இவரது மல்லிகைக் கிழமைகள், ஏழுவால் நட்சத்திரம், சம்மனசுக் காடு, நிழலன்றி ஏதுமற்றவன், மெசியாவின் காயங்கள், வலியோடு முறியும் மின்னல் உள்ளிட்ட இவரது கவிதைத் தொகுப்புகள் வாசகர்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றவை.

திரைத்துறையிலும் பாடலாசிரியராகவும் வசனகர்த்தாவாகவும் இன்னும் பல வடிவங்களிலும் இவரது பங்களிப்பு இருந்துவந்தது.

கர்ம வீரர் காமராஜரின் வாழ்க்கை வரலாற்றுப் படமான 'காமராஜ்' திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதியுள்ளார் பிரான்சிஸ் கிருபா. வெண்ணிலா கபடிக்குழு, அழகர்சாமியின் குதிரை, ராட்டினம், குரங்கு பொம்மை உள்ளிட்ட படங்களுக்கு பாடல்களை எழுதியுள்ளார்.

'கன்னி' எனும் இவரது படைப்பிற்கு 2007 ஆம் ஆண்டு ஆனந்த விகடனின் சிறந்த புதினம் விருது கிடைத்தது. 2008 ஆம்ஆண்டுநெய்தல் இலக்கிய அமைப்பின் சுந்தர ராமசாமி விருது, 'சம்மனசுக்காடு' கவிதைத் தொகுப்புக்காக சுஜாதா விருது உள்ளிட்டவை இவருக்குக் கிடைத்த விருதுகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

பிரான்சிஸ் கிருபாவின் மறைவுக்கு திரையுலகினர், எழுத்தாளர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# தமிழகம் முழுவதும் இந்திய அரசைக் கண்டித்து போராட்டம் நடத்தப்படுமென தி.மு.க. அறிக்கை

தமிழகம் முழுவதும் வருகிற 20 ஆம் திகதி மத்திய அரசைக் கண்டித்து கண்டனப் போராட்டம் நடத்தப்படும் என தி.மு.க. தெரிவித்துள்ளது.

தி.மு.க. பொதுச்செயலாளர் துரை முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேளாண் சட்டங்கள், பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வு, தனியார்மயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து போராட்டம் நடத்த தேசிய அளவிலான எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வருகிற 20 ஆம் திகதி காலை 10 மணியளவில் தி.மு.க. நிர்வாகிகள், தங்களின் இல்லம் முன்பாக கறுப்புக் கொடி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கண்டனப் போராட்டத்தில் கூட்டணிக் கட்சியினருடன் இணைந்து தி.மு.கவினர் ஈடுபட வேண்டும் என்றும், மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியக் குடியரசைப் பாதுகாப்போம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்க வேலைக்கான வயது வரம்பு அதிகரிப்பு

## அரசாணை வெளியிடப்பட்டது

தமிழக அரசு வேலைகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்ச வரம்பை 32 ஆக உயர்த்தும் அரசாணை தமிழ்நாட்டு அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை இந்த வயது வரம்பு 30 ஆக இருந்துவந்த நிலையில், குறைவான வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கும் அது 32 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 32 ஐ விட அதிகமாக வயது உச்ச வரம்பினைக் கொண்டுள்ள பதவிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது உச்ச வரம்பு இரண்டு ஆண்டுகளால் அதிகரிக்கப்படுவதாகவும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைம்பெண்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வயது உச்ச வரம்புக்கான நீடிப்பு அல்லது தளர்வுகள் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படையிலான பணி நியமனங்களைப் பொறுத்தவரை நடைமுறையில் உள்ள வயது உச்ச வரம்பில் மாற்றம் இல்லை எனவும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இந்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிக்கு தடை கோரும் வழக்கு விசாரணைக்கு வந்தது



சமூக ஊடகங்களில் இந்தியாவின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் எதிரான தகவல்கள் பகிரப்படுவதாக குற்றச்சாட்டுகள் நீண்டகாலமாக எழுந்து வந்தநிலையில், பேஸ்புக், வட்ஸ்-அப், இன்ஸ்டகிராம், டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் இந்திய மத்திய அரசு கடந்த பெப்ரவரி மாதம் புதிய தகவல் தொழில்நுட்பம் சார்ந்த விதிகளை அறிவித்தது.

இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக நெறிமுறைகள் சட்டத்தின் கீழான இந்த விதிகள், செல்லாது என அறிவிக்கக் கோரி கர்நாடக இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணாவும், பிரபல பத்திரிகையாளர் முகுந்த் பத்மநாபனும், இந்தியா முழுவதும் உள்ள அச்சு மற்றும் காட்சி ஊடகங்களின் அமைப்பாக உள்ள டிஜிட்டல் நியூஸ் பப்ளிர்ஸ் அசோசியேனுடன் இணைந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக் கல் செய்திருந்தனர்.

அந்த மனுவில், 'டிஜிட்டல் தளத்தில் வெளியிடப்படும் செய்திகளை, சம்பந்தப்பட்ட வெளியீட்டாளரின் விளக்கம் கேட்காமல் முடக்கம் செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தன்னிச்சையானது' எனக் கூறப்பட்டிருந்தது. செய்திகளை முடக்கம் செய்ய அதிகாரம் வழங்கும் பிரிவின் கீழாக தங்களது சங்க உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தடை விதிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள், இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள தனி உரிமையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது, ''ஊடகங்களைக் கண்காணித்து விளக்கம் கேட்காது நடவடிக்கை எடுக்கும் நடைமுறை இருந்தால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகம் இல்லாமல் போய்விடும்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

தமது தரப்பு வாதத்தை முன்வைத்த இந்திய மத்திய அரசின் வழக்கறிஞர்கள், 'மும்பை உயர்நீதிமன்றம் இந்தப் புதிய தகவல் தொழிநுட்ப விதிகளுக்கு விதித்த தடை நாடு முழுவதும் பொருந்தும். எனவே, தனியாக இந்த வழக்கினைத் தொடரத் தேவையில்லை' எனக் கூறியுள்ளனர்.

ஆயினும், 'மும்பை உயர்நீதிமன்ற உத்தரவிற்குப் பின்னர் 15 நாள்கள் கழித்தும் மத்திய அரசு செய்திகள் தொடர்பாக ஊடகங்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது' என மனுதாரர்கள் தரப்பில், குற்றஞ்சாட்டப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையுமடுத்து, "வழக்கை விசாரிக்க உச்ச நீதிமன்றம் தடை விதிக்காதபட்சத்தில் ஒக்டோபர் இறுதி வாரத்தில் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிப்போம்' என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# சந்தனமடு ஆற்றில் சட்டவிரோத மண் அகழ்வு நேரில் சென்று ஆராய்ந்தார் சாணக்கியன் எம்.பி.



மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சந்தனமடு ஆற்றில் இருந்து சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து அதனை பார்வையிட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குறித்த பிரதேசத்திற்கு அப்பகுதி மக்கள், விவசாய அமைப்புக்கள் சகிதம் நேற்று சென்றார்.

அவ்விடத்திற்கு சென்று மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வீதி புனரமைப்பிற்கு ஏதாவது அனுமதி வழங்கியதா? என வினவிய போது அவர்கள் அனைவரும் எதுவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை என தெரிவித்தனர். ஆகவே இந்த மண் அழ்வானது முற்றுமுழுதாக சட்டவிரோதமாக இடம்பெறுகின்றது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதி மக்கள் தனியார் ஒப்பந்தகாரர் மீதே விரல் நீட்டுகின்றனர். நாங்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் இல்லை, ஆனால் வீதிப் புனரமைப்பு என்ற போர்வையியல் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறுகின்றது. குறுகிய காலத்தில் முடிக்கக் கூடிய வீதி புனரமைப்பினை கூடிய காலத்திற்கு செய்து அதன் மூலம் மண் அகழ்வு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்படியான மண் பிரச்சினை ஒன்று உள்ளதை மாவட்ட செயலாளர் மற்றும் அபிவிருத்தி குழு இணைத்தலைவர் ஆகியோர் பார்வையிட்டு இது தொடர்பாக அப்பகுதி மக்களுக்கு சிறந்த தீர்வினை வழங்கி அப்பகுதியினை மண் மாபியாக்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்.

மாவட்ட குழு இணைத்தலைவர் பொலிஸாருக்கு அறிவித்து உடனடியாக மண்மாபியாக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது மாலைதீவிற்கு மண் ஏற்றுமதி செய்யப்படுவதாக நான் கூறிய போது குறித்த விடயதான அமைச்சர் அதனை நிரூபித்தால் நான் பதவி விலகுவேன் என தெரிவித்தார். ஆனால் மாலைதீவிற்கு மண் அனுப்பப்படுவதை புவிச்சரிதவியல் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆகவே நான் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சாத்திரம் சொல்பவரைப்போல் இவற்றை எல்லாம் கண்டுபிடித்து சொல்ல வேண்டி உள்ளது எனவும், இங்கிருந்து மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் உடனடியாக இந்தப் பகுதியை நிரப்பி கொடுப்பதுடன், அழிக்கப்பட்ட பனம் கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் உடனடியாக செய்யப்பட வேண்டும். இல்லாவிடின் மக்கள் வீதிக்கு இறங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

## 8 வயது சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி; சந்தேகநபருக்கு 28 வரை விளக்கமறியல்

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எட்டு வயதுடைய சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சிறுமியின் வீட்டில் மலசல குழி வேலைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் சிறுமியின் தாயார் தேவை காரணமாக வெளியில் சென்ற நிலையில் எட்டு வயதுடைய சிறுமியின் ஆடைகளை கழற்றி துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயன்றார் என கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தயாரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## குடி தண்ணீர் இன்றி பாதிக்கப்படும் கிண்ணியா பிரதேச மக்கள்



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி01 வள்ளுவர் வீதியில் வசித்து வரும் குடும்பங்கள் குடி தண்ணீர் இன்றி வாழ்கின்றோம் என கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 குடும்பங்கள் குடி தண்ணீர்நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர். 1996 களில் இருந்து தற்போது வரை குடி தண்ணீர் இன்மையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகிறோம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அப் பகுதியில் உள்ள கிணற்று நீரினை அருந்துவதால் சிறுநீரக நோய், வாந்திபேதி உள்ளிட்ட நோய்கள் ஏற்படுகின்றன எனவும் சிறு பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் பிரதான நீர் குழாயினை பொருத்தி தருவார்களேயானால் தாங்கள் சொந்த பணத்தில் குடிதண்ணீர் இணைப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே தங்கள் பகுதிக்கான குடி தண்ணீர் பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.



## 215 குடும்பங்களுக்கு கொவிட் நிவாரணம்

வாகரை பிரதேசத்தில் 13 கிராம சேவகர் பிரிவுகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 215 குடும்பங்களுக்கு நிப்பொன் பவுன்டேஷனின் நிதி அனுசரணையுடன் சேவாலங்கா மன்றத்தினால் கொவிட் நிவாரண உதவிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் 9 மாவட்டங்களில் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் 5 வயதிற்குட்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களை கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற 1,800 குடும்பங்களுக்கான அத்தியாவசிய நிவாரணப்பொருள்கள் அடங்கிய பொதிகளை உடனடி தேவைக்காக வழங்குவதோடு, இக் கொவிட் நிவாரணத் திட்டத்தினூடாக வாழ்வாதார உதவிகளையும் வழங்கவுள்ளது.

இச்செயற்திட்டத்தின் முதல் கட்டமாக, கடந்த14 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 13 கிராம சேவகர் பிரிவுகளில் 215 குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வாகரை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் யு.சுதாகரன், சேவாலங்கா மன்றத்தின் தலைமைக்காரியாலய பணிப்பாளர் உதயனி டயஸ், சேவாலங்கா மன்றத்தின் கிழக்கு மாகாணப்பணிப்பாளர் கு.நாகராஜன், சேவாலங்கா மன்றத்தின் உத்தியோகத்தர்கள், குறித்த பிரிவுகளுக்கான கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரது பங்குபற்றுதல் மற்றும் ஒத்துழைப்புடன் குறித்த தினத்திலேயே அனைத்துப் பிரிவுகளிலும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலைக்கு சடலத்துடன் சென்ற ஊர்தி ஓட்டோவுடன் விபத்து

கொரோனாத் தொற்றால் இறந்தவரின் சடலத்தை, திருகோணமலைக்கு கொண்டு சென்றிருந்த ஊர்தி முல்லைத்தீவு - கொக்குளாய் வீதியில், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, ஓட்டோவுடன், மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஊர்தி சாரதி படுகாயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வாகனமும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சொந்தமான வாகனம் ஒன்றில், முல்லைத்தீவு மாவட்டத்தில், கொரோனாத் தொற்றால் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம், நீண்ட நாள்களாக எரியூட்டப்படாத நிலையில், வவுனியா போன்ற வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, திரும்பிக்கொண்டு வந்த வைத்திருந்த நிலையில், குறித்த சடத்தை திருகோணமலையில் எரியூட்டுவதற்காக, செவ்வாய் மாலை எடுத்துச் சென்ற போதே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். குறித்த சடலம், திருகோணமலை கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.



# பாகிஸ்தான் – நியூசிலாந்து தொடர் பாதுகாப்பு அச்சுறுத்தலால் ரத்தானது



பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று ராவல்பிண்டியில் நடைபெறவிருந்த நிலையில் இந்தப் போட்டி மட்டுமன்றி முழுமையாக தொடரும் திடீரென ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தனது அணியை அனுப்பிவைத்த நியூசிலாந்து கிரிக்கெட் சபை, சில தினங்களுக்கு முன்னர் தங்களுக்கு சில பாதுகாப்பு எச்சரிக்கைகள் இருக்கின்றன எனத் தெரிவித்திருந்தது. இதனைத்தொடர்ந்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், தனிப்பட்ட முறையில் நியூசிலாந்து பிரதமரோடு உரையாடியிருந்தார். அப்போது அவர், தங்களிடம் உலகின் மிகச் சிறந்த புலனாய்வு அமைப்பு உள்ளது என்றும் நியூசிலாந்து அணிக்கு அச்சுறுத்தல் பாதுகாப்பு எதுவும் இல்லை என்றும் உறுதிபடத் தெரிவித்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், தற்போது இத் தொடர் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. போட்டி ஆரம்பமாகவிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்தத் தொடர் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் நடைபெறுமா என்பது குறித்து இதுவரை உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. 18 வருடங்களுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்குச் சென்றுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர்களில் விளையாடவிருந்தமை குறிப்பிடத்தக்கது. நியூசிலாந்து அணியினரை பாகிஸ்தானிலிருந்து விரைவாக வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என நியூசிலாந்து செய்திகள் தெரிவிக்கின்றன.

# டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷப் பண்ட் தொடர்ந்து செயற்படுவார்





இந்தியாவில் ஆரம்பமாகி நடைபெற்று வந்த இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடர், கொரோனா பரவல் காரணமாக நிறுத்தப்பட்டு இப்போது மீண்டும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வரும் 19 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.


இந்தியாவில் நடைபெற்ற முதல் பகுதி ஐ.பி.எல். தொடரில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டிருந்த ஸ்ரேயாஸ் ஐயர் காயமடைந்ததால் ரிஷப் பண்ட் அந்தப் பதவியை வகித்தார். அவரது தலைமையிலான டெல்லி கப்பிட்டல்ஸ் அணி சிறப்பாகவே செயல்பட்டது. இதுவரை 8 போட்டிகளில் விளையாடி 6 இல் வெற்றிபெற்று 12 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது டெல்லி அணி. இந்த அணிக்கு இன்னும் 6 லீக் போட்டிகள் மீதமிருக்கும் நிலையில் அந்த அணி இன்னும் 2 போட்டி களில் வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுவிடும்.

ஸ்ரேயாஸ் ஐயர் தற்போது காயத்தில் இருந்து குணமடைந்து அணிக்குத் திரும்பியதால் அணித்தலைவர் பதவியை யார் வகிக்கப்போகிறார்கள் என்ற குழப்பம் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டது. அணி நிர்வாகமும் அது தொடர்பாக உறுதியான தகவலை வழங்காதிருந்தது. இப்போது அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய போட்டிகளுக்கும் ரிஷப் பண்ட் தலை வராகத் தொடர்வார் என்று அணி நிர்வாகத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரி–20 தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் விராட் கோலி அறிக்கை மூலம் தெரிவிப்பு

டுபாயில் நடைபெறும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் இந்தியாவின் ரி-20 கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் என விராட் கோலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விராட் கோலி வெளியிட்டுள்ள அறிக்கையில், “பொறுப்பிலிருந்து விலகும் முடிவை பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய்ஷா மற்றும் தலைவர் கங்குலியிடம் கூறி விட்டடேன்” என அவர் தெரிவித்துள்ளார்.



டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியை வழிநடத்த வேலைப்பளுவைக் குறைப்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளேன் எனவும் மூன்று வகைக் கிரிக்கெட்டிலும் தொடர்ச்சியாக 8-9 வருடங்களாக விளையாடுவதோடு 5-6 வருடங்களாக அணியையும் வழிநடத்துவதையும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த சில தினங்களாக கோலியின் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகும் முடிவு பற்றி பல்வேறு செய்திகள் வெளியாகி வந்த நிலையில் தற்போது விராட் கோலி தனது அறிக்கை மூலம் அதனை உறுதி செய்துள்ளார். ஒருநாள் போட்டிகளுக்கான தலைவர் பதவியிலிருந்து அவர் விலகப்போகிறார் என்று எதிர்வுகூரப்பட்ட நிலையில் ரி-20 அணிக்கான தலைமைப் பொறுப்பைத் துறக்கிறேன் என அவர் அறிவித்துள்ளார்.

ஆழ்ந்த சிந்தனை மற்றும் நீண்ட ஆலோசனைக்கு பின்னதாக இந்த முடிவை எடுத்துள்ளேன் எனவும், குறிப்பாக தனக்கு மிகவும் நெருக்கமான அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி மற்றும் ரோகித் ஷர்மாவுடன் இது தொடர்பாக கலந்துரையாடிய பிறகே இந்த முடிவை எடுத்தேன் எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# டென்னிஸ் தரவரிசையில் ரபேல் நடால் ஆறாவது இடத்திற்கு இறங்கினார்

டென்னிஸ் உலகில் முன்னணி வீரராகத் திகழ்ந்து வரும் ரபேல் நடால், 20 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார். இவர் பிரெஞ்ச் ஓபன் அரையிறுதியில் ஜோகோவிச்சிடம் தோல்வியடைந்தார். அப்போது அவருக்கு காயம் ஏற்பட்டதனால் அவர் தொடர்ந்து ஓய்விலிருந்து வருகிறார். இதனால், அண்மைய உலக டென்னிஸ் தரவரிசையில் இவர் ஆறாவது இடத்திற்கு இறங்கியிருக்கிறார்.

அமெரிக்க ஓபனில் சம்பியன் பட்டத்தைத் தவறவிட்டாலும், ஜோகோவிச் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். அமெரிக்க ஓபன் கிண்ணத்தை வென்ற ரஷ்ய வீரர் டேனில் மெட்வடேவ் இரண்டாவது இடத்திலும், ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் மூன்றாவது, ஒலிம்பிக் சம்பியனான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் நான்காவது இடங்களிலும் உள்ளனர். டொமினிக் தீம் ஆறாவது இடத்திலிருந்து எட்டாவது இடத்திற்கு பின் தங்கியுள்ளார்.





## தியாகதீபம் திலீபனின் நினைவு கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு!

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரெண்டு நாள்கள் நீராகாரம் அருந்தாமல் அகிம்சை வழியில் உண்ணாநிலைப் போராட்டத்தை தொடர்ந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தியாகி திலீபன் அவர்களின் 34 ஆவது ஆண்டு நினைவு நாளின் தொடக்க நாளான கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அஞ்சலி செலுத்தினார்.

## அந்நியச் செலாவணி கையிருப்பு இலங்கையில் மிகவும் குறைவடைவு

### மூடிஸ் வெளியிட்ட அறிவிப்பு

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு இன்னும் குறைவாகவே இருப்பதாக 'மூடிஸ்' முதலீட்டாளர்கள் சேவை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம், 'மூடிஸ்', செப்டெம்பர் 10 ஆம் திகதி அன்று, இலங்கையின் வெளிநாட்டு நாணய இருப்பு நிலை பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2021, ஒகஸ்ட் இறுதியில் இலங்கையின் அந்நிய செலவாணி இருப்பு, 300 கோடி டொலர்களாக இருந்தது, இது இந்த ஆண்டின் தொடக்கத்தை விட 43 வீதம் குறைவானதாகும். அத்துடன் ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது சுமார் 60 கோடி டொலர் குறைவானது என்று 'மூடிஸ்' குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், 2025 வரை அரசாங்கத்தின் வருடாந்த வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துகை குறைந்தது 400 முதல் 500 கோடி டொலர்கள் என 'மூடிஸ்' குறிப்பிட்டுள்ளது.

அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்ந்து குறையும் என்றும் 'மூடிஸ்' தெரிவித்துள்ளது.

சர்வதேச சுற்றுலா மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் கடன் அல்லாத வரவுகள் விரைவாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள், அரசாங்கத்தின் வரிச் சலுகை மற்றும் தற்போதைய முடக்கல் காரணமாக, மேலும் கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் 'மூடிஸ்' முதலீட்டாளர்கள் சேவை தெரிவித்துள்ளது.

## மன்னார் எண்ணெய் வளம் தொடர்பில் தரவு சேகரிப்பு

மன்னார் மற்றும் காவிரி பள்ளத்தாக்கில் கனிய எண்ணெய் வளம் தொடர்பான ஆய்வுகளுக்காக முதற்தடவையாக விமானங்களை பயன்படுத்தி தரவுகளை சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவைத் தளமாகக்கொண்ட பிரபல ஆய்வு நிறுவனத்தின் ஊடாக இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் கனிய எண்ணெய் காணப்படக்கூடிய பகுதிகள் 20 ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு பகுதியை தனியார் நிறுவனமொன்று நீண்டகாலம் ஆய்வு செய்வதாகவும், அதற்காக அதிக பணம் செலவிடப்படுவதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் குறித்த 20 பெரும்பகுதிகளையும் 837 அலகாக பிரித்து புதிய வரைபடத்தை தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரைபடத்துக்கு அமைய தரவுகளை சேகரிப்பதற்காக விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிப்புற பொறிமுறை அவசியமில்லை

### அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவிப்பு

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வெளிப்புறப் பொறிமுறையொன்றின் தேவை ஒருபோதும் இல்லையென, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.



அதேபோன்று, அவ்வாறான பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் உள்ளக சட்டக் கட்டமைப்பின் கீழ், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்படும் ஊடகச் சந்திப்பு, நேற்று (வியாழக்கிழமை) முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்ட போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'ஜெனிவா குற்றச்சாட்டுகள், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடர் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை' எனும் தலைப்புகளின் கீழ், இந்த ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இம்முறை கூட்டத்தொடரின் போது, அதன் ஆணையாளர் நாயகம் மிச்செல் பெச்லெட்டால் முன்வைக்கப்பட்ட வாய்மொழி அறிக்கையின் போது, காணாமல் போனோருக்கு நட்டஈடு வழங்கல், எல்.டி.டி.ஈ சிறைக் கைதிகளை விடுவித்தல், பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்திருந்தமை மகிழ்ச்சிக்குரியதென்று, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளுக்குள் மறைந்திருந்து, இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையீடு செய்வதை, சீனா, ரஷ்யா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, பாகிஸ்தான், ஈராக், வெனிசியூலா உள்ளிட்ட 15 நாடுகள் எதிர்த்து, இலங்கையுடன் கைகோர்த்து நின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைப் பின்பற்றல், பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் கொண்டுள்ள பொறுப்புணர்வு, அவர்களின் விசேட பாராட்டுக்கு இலக்காகியுள்ளன என்றும், அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வலயத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இலங்கை அமைதியான நாடாக விளங்குகிறது.

பயங்கரவாதத்தை ஒழித்தல், அடிப்படைவாதத்தைப் பரப்பும் தீவிரவாதத்தை ஒழித்தல் போன்றே, நாட்டு மக்களிடையே சமாதானம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, சீரமைக்கப்பட்ட கொள்கையாகும் என்று எடுத்துரைத்த வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர், அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு, அதிகாரப் போட்டிகளில் சிக்கிக்கொள்ளாது முன்னோக்கி நகர்வதே இலங்கையின் நோக்கமென்றும் இதன்போது, இந்நாட்டின் அமைவிடம் தொடர்பில் அதிக அவதானத்துடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை எதிர்கொள்வதற்கான இலங்கையின் தயார்ப்படுத்தல்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த செயலாளர் ஜயநாத் கொழும்பகே, அரசாங்கத்தின் கொள்கை மிகத் தெளிவாக இருக்கின்றது என்றும் அது தொடர்பில், உலகின் பல நாடுகளுக்கு, கடந்த மாதங்களில் பல்வேறுபட்ட அறிக்கைகள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் பிரதிபலனாகவே, அந்நாடுகளின் ஒத்துழைப்பு இலங்கைக்கு தற்போது கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றன, இது விடயத்தின் பாரிய ஒருங்கிணைப்புடன் செயலாற்றியிருந்தன என்றும் அவர் எடுத்துரைத்தார்.

'கொவிட் சவாலை வெற்றிகொள்வது மற்றும் எதிர்காலத் திட்டங்கள்' என்ற உள்ளடக்கத்துடனேயே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் இம்முறை பங்கேற்கவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் அரச தலைவர்களதும் உரைகள் அமையவுள்ளன என்று, இந்த ஊடகச் சந்திப்பில் விசேட உரையாற்றிய ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

தத்தமது நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகள் தொடர்பான இணக்கப்பாடுகளுடன், கொரோனா சவாலை வெற்றிகொள்வதற்கு, இம்முறை கூட்டத்தொடர் பாரிய சந்தர்ப்பத்தை வழங்குமென்றும், அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்படும் பல்வேறு தவறான அபிப்பிராயங்களைச் சீர்செய்வதற்கும், இம்முறை ஐ.நா. கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொள்வார் என்று தான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் எனவும், அவர் மேலும் தெரி வித்தார்.

## விமான நிலைய அதிகாரிகளுக்கு போலி மின்னஞ்சல் அச்சம் கொள்ள வேண்டாம் என்கிறார் கமல் குணரத்ன

விமான நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட போலி மின்னஞ்சல் செய்தி தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பெறப்பட்ட மின்னஞ்சல் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி விமான நிலையம் மற்றும் அரசு கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் தாம் குறிப்பிடும் நான்கு நபர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் விமான நிலைய வலைத்தளத்திலிருந்து அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காகத் தரவுகளைத் திருடி இதைச் செய்திருக்கலாம் என உளவுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

பங்களாதேஷ் இராணுவத்தின் இணையத்தளம் ஹெக் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமே குறித்த மின்னஞ்சல் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களில் அவசரகாலத்தில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கடந்த 14 ஆம் திகதி முதல் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2021இல் வெளியிடப்பெற்றது.